**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No.96 /2019 DW1**

20.11.2025 **பி.வா.சா.1 செந்தில்குமார் சத்திய வாக்குமூலத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

என்னுடைய எதிர் வழக்குரையில் இறந்து போனவர் 32 வயது நிரம்பியவர் என்பதை நிருபிக்க ஆவணங்கள் வாதி தரப்பில் போடவில்லை என சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. இறந்தவரின் வருமானத்தை நிருபிக்க ஆவணங்கள் போடவில்லை என்ற ஆட்சேபணையை என்னுடைய எதிர் வாக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு வழக்குறிஞர் அறிவிப்பு வந்தது. அதற்கு எங்கள் தரப்பில் பதில் கொடுக்கப்பட்டதா என்றால் ஆம் கொடுத்தோம். காவேரி என்பவர் வீட்டில் இருந்து 3ம் நபர் சடட்ட விரோதமாக வெளியில் இழுத்த மின் கம்பியில் எவ்வளவு வோல்டேஜ் கரண்ட் இருந்தது என்பதை நிருபிக்க எங்கள் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் Consumer Legder கொடுக்கப்பட்டுள்ளது. சட்ட விரோதமாக எடுக்கப்பட்ட மின் ஒயர் மழையின் காரணமாக அறுந்து விழுந்து இறந்தவரின் வாகனத்தில் பட்டு அவருக்கு விபத்து ஏற்பட்டது என்பதை ஒப்புக்கொள்கிறேனா என்றால் மழையின் காரணமாக அறுந்து விட்டதை ஒப்புக் கொள்ளவில்லை. இறந்தவர் ஓட்டிய வாகனம் பின்நோக்கி சென்றதால் மின் ஒயரில் பட்டு விபத்து ஏற்பட்டது. இறந்தவரின் கவனக்குறைவு, அஜாக்கிரதையால் தான் மின் ஒயர் அறுந்து விழுந்து விபத்து ஏற்பட்டது என எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய எதிர் வழக்குரையில் 3ம் பிரதிவாதியின் பெயரில் தான் சர்வீஸ் கனெக்ஷன் உள்ளது என்றும், அவர் தான் சட்ட விரோதமாக மின்ஒயரை வெளியில் இழுத்து உள்ளார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேலும் 3ம் பிரதிவாதி தான் அவருடைய பெயரில் உள்ள சர்வீஸ் கனெக்ஷனில் இருந்து ஒயரை சட்ட விரோதமாக வெளியில் இழுத்துக் கொண்டு வந்து மரம், கொம்பில் டியூப் லைட் பொருத்தி சட்ட விரோதமாக மின்சாரத்தை

பயன்படுத்தியுள்ளார் என எனது எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி காருக்கு வண்ணம் பூசும் இடத்திற்கு வெளிச்சம் வேண்டும் என்பதற்காக அவ்வாறு சட்ட விரோதமாக மின் ஒயரை இழுத்து வந்து டியூப் லைட் கனெக்ஷன் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 10.11.2015ல் சுரேஷ் பயன்படுத்தி வந்த சர்வீஸ் கனெக்ஷன் துண்டிக்கப்பட்டது என பி.வா.சா.ஆ.1ல் கண்டுள்ளது என்றால் சரிதான். விபத்து 18.05.2015ல் நடந்தது என்றால் சரிதான். மின் இணைப்பு துண்டிக்கப்படுவதற்கு முன்பாக இந்த விபத்து நடந்தது. பி.வா.சா.ஆ.1 ன் படி மின் இணைப்பு காவேரி அம்மாள் பெயரில் இருந்தது என்றால் சரிதான். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் தான் முதன் முறையாக காவேரி அம்மாளுக்கு சொந்தமான கடையை வாடகைக்கு எடுத்து 3ம் பிரதிவாதி பயன்படுத்தி வந்தார் என்பதை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் 3ம் பிரதிவாதிக்கு சொந்தமான மின் இணைப்பு என்றும், தற்போது நிருபண வாக்குமூலத்தில் ஒரு காவேரி அம்மாளுக்கு சொந்தமான மின் இணைப்பு என முன்னுக்கு பின் முறனாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அதன் மூலம் மின் விபத்திற்கு எங்களது மின்சார வாரியம் பொருப்பில் இருந்து தப்பிக்க வேண்டும் என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மின்சார ஒயரில் பாதிப்பு ஏற்பட்டு மின் கசிவு ஏற்பட்டால் அந்த மின் இணைப்பு யார் பெயரில் உள்ளதோ அவர் தான் பொருப்பு என எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சர்வீஸ் கனெக்ஷன் சட்ட விரோதமாக இழுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட இடம் வெட்ட வெளி பகுதி என்றால் சரிதான். எங்கள் நிர்வாகத் தரப்பில் அடிக்கடி மின் ஒயர் பயன்படுத்தப்படும் பகுதிகளை ஆய்வு செய்து பராமரித்து வருவோம் என்றால் சரிதான். ஆட்டு சந்தைக்கு வரும் நபர்கள் தங்கள் கார்களை மேற்படி வெட்ட வெளி பகுதியில் பார்க்கிங் செய்வது வழக்கம் என்றால் சரிதான். மேற்படி சொன்னவாறு பார்க்கிங் செய்யும் பழக்கம் குறித்து மேற்படி விபத்து நடந்த பிறகு தான் எங்களுக்கு தெரியவந்தது. நான் கொடுத்த சர்வீஸ் கனெக்ஷனில் இருந்து சட்ட விரோதமாக மின்சாரம் எடுத்து டியூப் லைட் பயன்படுத்தும்

முறை குறித்து எங்களுக்கு ஏற்கனவே தெரியும் என்றால் சரியல்ல. மின் பயனீட்டாளர்கள் சட்ட விரோதமாக மின்சாரத்தை பயன்படுத்தினால் அவர்களது சர்வீஸ் கனெக்ஷனை துண்டிக்கலாம், அபராதம் விதிக்கலாம், குற்ற வழக்கு பதியலாம் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி தவறாக மின்சாரத்தை பயன்படுத்தியது குறித்து எங்களுக்கு ஏற்கனவே தெரியும் என்றும் நான் முறையாக நடவடிக்கை எடுக்க வில்லை என்றால் சரியல்ல. சட்ட விரோதமாக மின்சாரம் பயன்படுத்தியது குறித்து எங்கள் நிறுவனத்திற்கு புகார் வந்தது என்றும் நாங்கள் அதை கண்டு கொள்ளாமல் விட்டு விட்டோம் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி சண்முகம் தான் ஆட்டு சந்தை நடத்துவதற்கு ஏலம் எடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. இறந்து போனவர் தனது வாகனத்தில் ஆடுகளை இறக்கி விட்டு தனது வாகனத்தை பார்கிங் செய்வதற்காக பின் நோக்கி சென்றார் என்றால் சரிதான். மேற்படி விபத்து குறித்து குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.